## இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் - 2016

இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க சட்டத்தினால் மற்றும் 2012 இன் 15 ஆம் இலக்க இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் (திருத்திய) சட்டத்தின் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2017 செப்தெம்பர் 12 ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் மகோபாத்தியாயர் அடிகளுக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வின் பெறுமதி ரூபா 77,958,181 தொகை எனினும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 78,035,323 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 77,142 தொகை மிகையாகவும் மற்றும் நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்கான நூலகப் புத்தகங்கள் மற்றும் தளபாடங்களின் திரண்ட பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 18,212,891 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 17,900,789 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி மற்றும் திரண்ட இலாபம் ரூபா 312,102 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வருமானக் கூற்றில் செயற்பாட்டு வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த மூலதன நிதிய இழிந்த பெறுமதி ரூபா 40,212,796 தொகை எனினும் கணிப்பீட்டின் படி அவை ரூபா 42,245,055 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 2,032,259 தொகையினால் ஆண்டிற்கான பற்றாக்குறை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்றினை பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் வழுக்கள் அவதானிக்கப்பட்டமையானது அதனது ஒப்புடைமை தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கலாக காணப்பட்டது.

(i) மீளாய்வாண்டின் போது நன்கொடைகள் மற்றும் வெகுமதி நிதியத்திற்கு பணமாக கிடைத்திருந்த பெறுமதி ரூபா 126,382 தொகை எனினும் அதனை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,498,883 தொகை என காட்டப்பட்டிருத்தல்.

(ii) நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது காசுகள் செலவிடப்பட்ட உள்ளவாறான செலவு ரூபா 346,762,201 தொகை எனினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அவை ரூபா 346,721,125 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 41,076 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தல்.

**2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 636,742 தொகை பெறுமதியான 06 கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 134(3) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | 2014 ஆண்டிற்கான கேள்வி பிணை வைப்புக்கள் ரூபா 122,927, நூலகப் புத்தகங்களுக்கான ரூபா 2,000 பெறுமதியான பிணை வைப்புக்கள் மற்றும் காலங்கடந்த ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 7,891 தொகை என்பவற்றை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2010 அக்தோபர் 15 ஆம் திகதிய 932 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பந்தி 02 | பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் வெளிவாரிப் பட்டப்படிப்பு பாடநெறி, வெளிவாரி பௌத்த கற்கை டிப்ளோமா பாடநெறி, வெளிவாரி ஆங்கிலப் பாடநெறி மற்றும் தகவல் தொழிநுட்ப பாடநெறிகள் ஆகிய வெளிவாரி பாடநெறிகளை ஒரு இடத்திற்கு மையப்படுத்தி நடத்தியிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழத்தின் நிதி விளைவுகள் ரூபா 52,229,436 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின்

பற்றாக்குறை ரூபா 36,199,372 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,030,064 இற்கான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது தனிநபர் சம்பளச் செலவுகள் ரூபா 19,333,966 தொகையினால் அதிகரித்திருத்தல் மற்றும் வருடாந்த பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 17,092,875 தொகையினால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சியிற்கு முக்கியமாகப் பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் வளர்ச்சியடைந்த பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் 2015 ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 2016 ஆண்டின் போது அப்பற்றாக்குறை 44 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுடன் ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 53,963,421 இற்கான நிறுவனத்தின் பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்திருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே அவை ரூபா 137,562,822 தொகை மற்றும் ரூபா 157,959,599 தொகைகளாக ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2012 இன் 15 ஆம் இலக்க இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரகாரம் புத்த பெருமானின் போதனைகளுக்கு இணங்க மாணவ பிக்குமார்களுக்கு பயிற்சி வழங்கள், பௌத்த தியானங்கள் மீதான பயிற்சி மற்றும் ஆய்வுகளை மேம்படுத்தல், தேரவாத பௌத்த கோட்பாடுகளை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரச்சாரம் செய்வதற்கு மாணவ பௌத்த பிக்குகளுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் பௌத்த பண்பாடு மற்றும் அவற்றின் பெறுமதியினை மேம்படுத்தல் பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் அக்குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) கல்விச் செயலாற்றுகை

(i) 1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகச் சட்டத்தின் 16(4) பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் கல்வி விடயங்களின் கட்டுப்பாடு மற்றும் பொதுவான மேற்பார்வை செய்தல் மூதவையிடம் இருந்தது. எனினும் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாற்றுகையை பரிசோதனை மேற்கொள்வதற்காக தேவையான எழுத்துமூல அறிக்கைகள் மூதவைக்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்தியிருக்காமையால் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்கள் தொடர்பான கல்வி செயலாற்றுகை மூதவையினால் முறைப் பிரகாரம் பரிசோதனை செய்திருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தியிருந்த கல்விப் பதவியணியின் கல்விசார் பொறுப்புக்களுக்கான நடைமுறை (Loads of practices in academic accountability for academic staff in Sri Lankan University System) இன் கீழ் வேலை மதிப்பீட்டு முறை (Work norms) இன் பிரகாரம், கல்வி சார் பதிவயணியினருக்கு வேலைக் கொள்திறனை சாட்டுவதற்காக மற்றும் மதிப்பாய்வு செய்வதற்காக அவ் வழிகாட்டல் கோவையை ஏற்றுக்கொள்ளல் அல்லது பல்கலைக்கழகத்திற்கு பொருத்தமான முறையில் அதனை பதிலீடு செய்து தயாரித்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அதன் காரணமாக கல்வி செயலாற்றுகையை மதிப்பாய்விற்குத் தேவையான அளவுகோள்கள் பல்கலைக்கழகத்தில் காணப்படவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது 02 அரை ஆண்டுகளுக்கான கல்வி பதவியணியினை விரிவுரையாள அடிகள் 38 பேர்களின் தனிப்பட்ட நேரசூசி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கல்வி செயலாற்றுகைக்கான குறைந்தளவு வேலைக் கொள்திறன் மேற்கொள்ளப்பட்டிருந்ததென உறுதிப்பாடு ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(iv) பல்கலைக்கழகத்தின் 04 கல்வித் துறைகளில் 50 விடயங்களுக்கான மீளாய்வாண்டின் போது 02 ஆறுமாதங்களிலும் நடத்தியிருந்த விரிவுரைகளின் எண்ணிக்கை நடத்துவதற்கு எதிர்பார்த்திருந்த விரிவுரைகளின் எண்ணிக்கையை விட 68 சதவீதம் முதல் 86 சதவீதம் வரை குறைந்த நிலை ஒன்றே காணப்பட்டது.

(v) பல்கலைக்கழக சட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஒன்றான பல்கலைக்கழகத்தின் பிக்கு மாணவர்களிடையே பௌத்த தியானங்கள் தொடர்பாக பயிற்சி மற்றும் ஆய்வுகளை மேம்படுத்துவதற்கு, குறிப்பிட்ட பாடநெறிகளுக்காக எல்லா கல்வி ஆண்டுகளிலும் முதலாவது ஆறு மாதத்தில் மாத்திரம் ஒரு வருடத்தில் விரிவுரைகள் மற்றும் செய்முறைகள் பயிற்சிகளுக்காக 60 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த மணித்தியாலய எண்ணிக்கை ஆண்டின் போது நடத்தக்கூடிய ஒட்டுமொத்த விரிவுரை மணித்தியால எண்ணிக்கைக்கு ஒப்பாக 10 சதவீதமான குறைந்த பெறுமதியினையே பெறப்பட்டிருந்தது. எனினும் இரண்டாம் ஆறுமாதங்களிலும் பௌத்த தியானம் கட்டாயமாக்கப்பட்டுள்ளவாறு பாடநெறி அலகுகளை உட்படுத்தி நிறுவனத்தின் பௌத்த தியானத்தினை மேம்படுத்தும் குறிக்கோள் மிகவும் ஆக்கவபூர்வமாக நிறைவேற்றுதல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) ‘‘சதிப்பட்டான தியான முறை’’ யின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் தியானங்களை அறிமுகப்படுத்துவதற்கும் தியான முறையில் நடைமுறை தன்மையினை பகிரங்கப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12 மில்லியனை விட மிகையான தொகை ஒன்று செலவிடப்பட்டு பல்கலைக்கழக வளாகத்தில் பூந்தோட்டம் அலங்கரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் நான்கு சதிப்பட்டான பயிற்சி வழங்குவதற்கு பிக்குகளுக்கு பொறுத்தமான இடம் ஒன்று வடிவமைத்து கொடுப்பதற்கு முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vii) பாடநெறி அலகுகளில் சூத்திர தர்மம், ஒழுக்காற்று, நுன்பொருள் கோட்பட்டியல் ஆகிய புத்த பெருமானினால் போதிக்கப்பட்டிருந்த எண்பத்து நான்காயிரம் தர்மா கோட்பாடு குவியலில் எந்த அளவு தொகை பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு கல்வித் துறைகளில் பட்ட பாடநெறிகளின் மூலம் கற்பிக்கப்படுகின்றனவா என உறுதிப்பாடு ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ‘‘புத்தபெருமானின் போதனைகளின் பிரகாரம் மாணவ பிக்குகளுக்கு பயிற்சி வழங்கல்’’ எவ்வளவு தூரத்திற்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என உறுதிப்பாடு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) **நூலகப் புத்தகங்களைப் பயன்படுத்துதல்**

நூலகங்களை பயன்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் படி, பல்கலைக்கழக மாணவ பிக்குகள் தமது கல்வி விடயங்களுடன் தொடர்பாக நூலகத்தை பயன்படுத்துவதன் மூலம் சுயமாக கற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. அந்த நிலைமையை தவிர்ப்பதற்காக தேவையான தந்திரோபாய திட்டமிடல் மூலம் நூலகங்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல் ஒன்று காணக் கூடியதாக இருக்கவில்லை.

## 4.2 கல்விப் பதவியணியினர் மற்றும் பௌதீக வளங்களை குறைவாகப் பயன்படுத்துதல்

பல்கலைக்கழகத்தின் இரண்டு கல்வி பீடங்கள் நடாத்தப்படும் பாடநெறிகளில் விருப்பத்திற்குரிய பாடங்கள் முதலாம் ஆண்டு முதல் தெரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமையால் அந்த பாடநெறிகளின் சுமார் 35 பாடங்களுக்கு பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 1 முதல் 11 வரை மிகவும் குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினருக்காக வழங்கியிருந்த இரண்டு விடுதிகளில் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலமொன்றில் பயன்படுத்தும் நீர் மற்றும் மின்சாரத்திற்காக அவ் விடுதிகளை பயன்படுத்தும் பதவியணியிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,483,577 தொகை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.4 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான நுழைவு வாயில் மற்றும் 02 பாதுகாப்பு குடில்கள் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் செயற்பாடுகளின் போது பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம் ஒப்பந்த வேலையின் மதிப்பீட்டு ஒப்பந்தத் தொகைக்கு நேரொத்த CIDA/ICTAD பதிவு செய்துள்ள தரம் C 06 எனினும் அதற்கு முரணாக C 05 எனக் குறிப்பிட்ட கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் போட்டி அடிப்படையில் கூறுவிலைகள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் ஒரு விலைகூறல் தாரரினால் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 16,500,000 தொகைக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தில் ரூபா 298,243,258 இற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நான்கு மாடி நூலகக் கட்டிடத்தின் பெறுமதியில் நிறைவேற்றப்படாத 03 வேலை விடயங்களுக்கான ரூபா 2,723,025 மற்றும் 04 நிர்மாண விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு புரம்பாக புறம் முறையில் விதந்துரைந்து ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததை கணக்காய்வினால் சுட்டிக்காட்டிய பின்னர் 02 வேலை விடயங்கள் சரிசெய்யப்பட்டிருந்தன. நிறைவேற்றப்படாத ஏனைய விடயங்களுக்காக மேலும் ரூபா 3,243,069 தொகை தடுத்து வைத்திருந்த போதிலும் புறழ் கொடுப்பனவை விதந்துரைத்த அலுவலர்களுக்கு எதிராக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்விசார் பதவியணியில் 12 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ12 கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஜுலை 04 திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் மஹோபாத்தியாயர் அடிகளாரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறை | அரச பெறுகைள் வழிகாட்டலின் பிரகாரம் போட்டி கூறுவிலை மீது ஒப்பந்தங்கள் சாட்டப்பட்டமை. |
| (ஆ) | கல்விச் செயலாற்றுகை | கல்வி செயலாற்றுகைகளை மதிப்பாய்வு செய்வதற்காக பொருத்தமான அளவீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் கல்விச் செயலாற்றுகையை மதிப்பாய்விற்கு உட்படுத்தப்படாமை. |
| (இ) | பதவியணியினர் நிருவாகம் | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |